
# கிறிஸ்துவை சேவிப்பவர்களை நாம் நமது இல்லங்களுக்குள் வரவேற்கிறோம்.

### தங்கள் வீடுகளில் பிறருக்கு சேவைபுரிய பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

இந்த குழந்தைகளுக்கான நடவடிக்கைகளில் அவர்களுடைய தேவைக்கும் வயதுக்கும் ஏற்றவைகளைத் தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "கர்த்தாவே, பிள்ளைகள் தங்கள் வீடுகளில் உமக்கு சேவை செய்யும் வழிமுறைகளைக் காண உதவுவீராக"

ஒரு தீர்க்கதரிசிக்கு அறை ஒதுக்குதல் பற்றிய கதையை போதிக்க ஆயத்தம்செய்க. பயணிகளுக்கு விருந்து செய்து வரவேற்பு நல்கிய பெண்மணியை தேவன் எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதைக் காண **2 இராஜா. 4:8-37** ஐ வாசிக்கவும்.



இந்தக் **கேள்விகளுக்கு** பதிலைக் காணவும். ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் பதில் வருகிறது.

- எலிசாவுக்கு அந்தப் பெண் என்ன செய்தாள்? *(வச.10)*
- அந்தப் பெண்மணிக்கு எலிசா என்ன செய்தார்? *(வச.16)*
- குழந்தைக்கு என்ன நேர்ந்தது? *(வச.20)*
- உதவிக்காக அந்தப் பெண்மணி யாரிடம் சென்றாள்? *(வச.27)*
- அந்தப் பையனுக்கு உதவி செய்யும் முன்னர் எலிசா என்ன செய்தார்? *(வச.33)*
- குழந்தைக்காக எலிசா என்ன செய்தார்? *(வச.35)*

தீர்க்கதரிசியின் அறை என்ற கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ மனப்பாடமாகக் கூறவும்.

### 2 இராஜா. 4:8-37ல் உள்ள கதையின் பகுதிகளை நாடகமாக்குக.

- ஆராதனைத் தலைவரிடம் பேசி குழந்தைகள் நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்.
- எல்லா பகுதிகளையும் நாடமாக்க வேண்டும் என்று அவசியமில்லை.

  **எலிசா, பெண்மணி, கணவன், கதை கூறுபவர்** வேடங்களில் பெரிய பிள்ளைகளோ பெரியவர்களோ நடிக்கலாம்.

- கதை கூறுபவர் கதைச் சுருக்கம் கூறி குழந்தைகள் தாங்கள் நடிக்க/ பேச வேண்டியவற்றை நினைவுபடுத்த உதவுபவர்.
- எலிசாவிடம் ஒரு தடி இருக்கும் (ஊன்று கோல்)
- இளம் பிள்ளைகள் **பையன், வேலையாட்கள்** பாத்திரங்களை ஏற்கட்டும்.

**கதைகூறுபவர்:** 2 இராஜா 4:8-16ல் இருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின் கூறவும் “சூனேமியாளாகிய அப்பெண்மணி தன் கணவனிடம் கூறுவதைக் கேட்கவும்.”

**பெண்** : “பயணம் போகும்போது இங்கு வந்து அடிக்கடி நம்மை சந்திக்கும் தீர்க்கத்தரிசிக்கு நான் ஏதாவது செய்ய விரும்புகிறேன். அவர் இங்கு வரும்போது தங்குவதற்காக ஓர் அறையைக் கட்டிக் கொடுக்கலாமா?”

**கணவன்** : “அது நல்ல யோசனைதான். நான் மாடியில் ஓர் அறையைச் கட்டுவேன்.”

**எலிசா** : (கதவைத்தட்டி) “நாங்கள் உங்களைப் பார்க்க வந்திருக்கிறோம்.”

**பெண்** : “வாருங்கள் ஐயா! தாங்கள் உங்களுக்காகக் கட்டி இருக்கும் அறையை உள்ளே வந்து பாருங்கள்!”

**எலிசா** : “நன்றி! உங்கள் பெருந்தன்மைக்காக உங்களை ஆசீர்வதிக்கும் படியாக தேவனை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு குழந்தை இல்லை என்று எனக்குத் தெரியும். அடுத்த வருடம். ஒரு பையன் உங்கள் கையில் இருப்பான்.”

**கதைகூறுபவர்:** 2 இராஜா.4:17-25ல் இருந்து கதையின் இரண்டாவது பாகத்தைக் கூறவும். “பையன் தன் தந்தையிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**பையன்** : “அப்பா, இன்று நானும் உங்களோடு வயலுக்கு வருகிறேன்.”

**கணவன்** : “நல்லது! என்னோடு வந்து எனக்கு உதவி செய்!” (கணவன் தன் மகனோடு வேலையாட்கள் கதிர் அறுத்துக் கொண்டு இருக்கும் இடத்துக்கு வருகிறான்).

**வேலையாட்கள்:** “வணக்கம் ஐயா!” “உங்களையும் உங்கள் பையனையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக.”

**பையன்** : (தன் தலையைப் பிடித்துக்கொண்டு) “ஒ! வலிக்கிறதே! அப்பா என் தலை மிகவும் வலிக்குது!”

**கணவன்** : (ஒரு வேலைக்காரனை நோக்கி) “இவனுடைய அம்மாவிடம் இவனைக் கொண்டு போய் விட்டுவிடு!”

**பெண்** : (பையன் சாகும் வரை பிடித்துக்கொள்கிறாள். பையன் தரையில் விழுகிறான். அவள் கூறுகிறாள்). “ஒரு கழுதையைக் கொண்டுவா!”

**கதைகூறுபவர்:** 2 இராஜா 4:26-37ல் இருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறுகிறார். “எலிசா தனது வேலைக்காரனாகிய கேகேசியிடம் கூறுவதைக் கேளுங்கள்.”

**எலிசா** : “அந்த சூனேமியாள் வருகிறாள்! என்ன தவறு நடந்து விட்டதோ?”

**பெண்** : (நடந்து, கண்களைத் துடைத்துகொண்டு, அமைதியாக எலிசாவிடம் சென்று) “என் பையன் இறந்து விட்டான்! உதவி செய்யுங்கள்.”

**எலிசா** : “நாம் அவனிடம் போவோம்” (அவளோடு வீட்டிற்குப் போகிறார்கள். பையன் அருகே முழங்காலிட்டு ஜெபிக்கிறான். பையன் மேல் குப்புறப்படுக்கிறான்).

**பையன்** : (பல முறை தும்மி, எழுந்து உட்காருகிறான்).

**எலிசா** : “இதோ உன் மகன்!”

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுகிறார்.

**கேள்விகள்** : இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்காக நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கலாம்).

**வரைதல்** : இந்தக் கதையில் வரும் வெவ்வேறு பொருட்களையோ மனிதர்களையோ சிறுவர்கள் படமாக வரையலாம்.

- ஒரு கல்லால் கட்டப்பட்ட வீட்டின் மொட்டை மாடியில் ஒர் அறை, மேசை, நாற்காலி, விளக்கு, படுக்கை, தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு இருக்கும் பையன், கழுதை, எலிசாவின் கைத்தடி ஆகிய படங்களை வரையலாம்.
- ஆசிரியர், ஒர் அறை, அதற்குள் ஒரு மேசை, நாற்காலி, விளக்கு ஆகிய படத்தை வரையட்டும் பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும்.
- படம் வரைய பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவலாம்.
- இந்தப் படங்களை ஆராதனையின் போது சிறுவர்கள் பெரியவர்களுக்குக் காட்டி விருந்துபசரித்தல் பற்றியும், குறிப்பாக, தேவப் பணியில் இருப்பவர்களை ஆதரிப்பது பற்றியும் விளக்கலாம்.

நமது வீட்டை தேவனுக்கு சேவை செய்யும் இடமாக எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதற்கு வேறு உதாரணங்களை சிறுவர்கள் கூறலாம். மேலும், “தேவனை ஆராதிக்க மக்கள் செல்லும் வெவ்வேறு வகையான இடங்கள் எவை” என்ற கேள்வியையும் கேட்கவும்.

**சங்கீதம்** 24:7-10 ஐ நான்கு சிறுவர்கள் ஒவ்வொரு வசனமாகக் கூறட்டும்.

நமது இல்லங்களில் தேவனுக்கு சேவை செய்வது பற்றியும், நமது வீடுகளில் தேவனை ஆராதிக்க கூடுவதற்காக உபயோகிப்பது பற்றியும் **பெரிய பிள்ளைகள் கவிதையோ பாடலோ எழுதலாம்.**

இளம் குழந்தைகள் எபே.2:19 ஐயும், பெரிய குழந்தைகள் எபே.2:19-20 ஐயும் **மனனம் செய்க.**

**ஜெபம்:** கர்த்தாவே இந்த முழு உலகமும் உமக்கு உரியது. எங்கள் வீடும் உமக்கு உரியது. எங்களுடைய வீடுகளில் இருந்து வரும் துதியை நீர் பெற்றுக் கொள்ளுவதற்காக நன்றி. விருந்து உபசரித்தலை எங்கள் குடும்பங்கள் உமக்கு ஒரு பரிசாக வழங்குவதாக.